**செய்தி வெளியீடு எண்: 747** **நாள்:09.10.2020**

**செய்தி வெளியீடு**

**அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில்**

**முதுநிலை பட்டப்படிப்பு சேர்க்கைக்கு இணைய தளத்தில் பதிவு செய்யலாம்**

அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 2020–2021ஆம் கல்வியாண்டிற்கான முதுநிலை பட்டப்படிப்பு சேர்க்கைக்கான விண்ணப்பங்கள் இணையதளம் வழியாக 10-10-2020 முதல் 20–10–2020 வரை www.tngasapg.in மற்றும் www.tngasapg.org என்ற இணையதள முகவரியில் பதிவு செய்யலாம். ஒரு கல்லூரிக்கு விண்ணப்பம் பதிவு செய்ய பதிவு கட்டணம் ரூ.2/– மற்றும் விண்ணப்பக் கட்டணம் ரூ.58/- சேர்த்து ரூ.60/- செலுத்தப்பட வேண்டும். SC/ST விண்ணப்பதாரர்களுக்கு பதிவுக் கட்டணம் ரூ.2/– மட்டும் செலுத்தினால் போதுமானது. மாணாக்கர்கள் தங்களின் சான்றிதழ்களை 15–10–2020 முதல் 20–10–2020 வரை www.tngasapg.in என்ற இணையதளத்தில் உள்ள அட்டவணைப்படி பதிவேற்றலாம். இது தொடர்பான கூடுதல் விபரங்கள் மற்றும் எந்தெந்த கல்லூரிகளில், என்னென்ன பாடப்பிரிவுகள், சேர்க்கை எண்ணிக்கை விவரங்கள் www.tngasapg.in மற்றும் www.tngasapg.org என்ற இணையதள முகவரியில் கொடுக்கப்பட்டுள்ளது.

இணையதளத்தில் பதிவு செய்வதில் ஏதேனும் சிரமம் இருந்தால் மாணாக்கர்கள் 044–22351014, 044–22351015 மற்றும் 044-28276791 என்ற எண்ணிற்கு காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை தொடர்பு கொண்டு கூடுதல் விவரம் மற்றும் வழிகாட்டுதல் பெறலாம். இது தொடர்பாக care@tngasapg.org மற்றும் tndceoffice@gmail.com என்ற email முகவரி மூலமாகவும் மாணாக்கர்கள் சந்தேகங்களை கேட்டு தேவையான வழிகாட்டுதல்களைப் பெறலாம்.

**கே.பி. அன்பழகன்**
**உயர்கல்வித் துறை அமைச்சர்.**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**